பதினொன்றாம் வகுப்பு – பாடம் : தமிழ்

இயல் : 1. பேச்சுமொழியும் கவிதைமொழியும்

பலவுள் தெரிக. - பயிற்சித்தாள் நாள் : 15.10.2020

1. ஒரு திரவ நிலையில் நான் விரும்பும் வகையில் என்னிடம் கீழ்ப்படிந்து நடந்துகொள்ளும் எனது மொழி எழுத்துமொழியாக பதிவு செய்யப்படுகிற போது உறைந்துபோன பனிக்கட்டியைப் போன்ற திட நிலையை அடைகிறது. இவ்வரிகள் உணர்த்தும் கருத்து.
   அ) மொழி என்பது திட, திரவ நிலையில் இருக்கும்.
   ஆ) பேச்சுமொழி எழுத்து மொழியை திட, திரவப் பொருளாக உருவாக்கப்படுவதில்லை.
   இ) எழுத்துமொழியைவிட பேச்சுமொழி எளிமையானது.
   ஈ) பேச்சுமொழியைக் காட்டிலும் எழுத்துமொழி எளிமையானது.
2. பேச்சுமொழியைக் கவிதையில் பயன்படுத்துபவர்கள் ..... வகையினர்.
   அ) இரண்டு ஆ) மூன்று இ) நான்கு ஈ) ஐந்து
3. புல்லின் இதழ்கள் என்னும் நூலின் ஆசிரியர்
   அ) இந்திரன் ஆ) ஸ்டெஃபான் மல்லார்மே இ) பாப்லோ நெரூடா ஈ) வால்ட் விட்மன்
4. உணர்ச்சிக்கு மிக அருகில் இருக்கும் மொழி
   அ) இலக்கியமொழி ஆ) கவிதைமொழி இ) பேச்சுமொழி ஈ) எழுத்துமொழி
5. 1971ஆம் ஆண்டு இலக்கியத்திற்கான நோபல் பரிசினைப் பெற்றவர்
   அ) இந்திரன் ஆ) பாப்லோ நெரூடா இ) வால்ட் விட்மன் ஈ) ஸ்டெஃபான் மல்லார்மே
6. 2011ஆம் ஆண்டு 'சாகித்திய அகாதெமி'யின் விருது பெற்ற நூல்
   அ) முப்பட்டை நகரம் ஆ) சாம்பல் வார்த்தைகள் இ) தமிழ் அழகியல்
   ஈ) பறவைகள் ஒருவேளை தூங்கப் போயிருக்கலாம்
7. குறியீட்டுக் கவிதையை உருவாக்கியவர்
   அ) ஸ்டெஃபான் மல்லார்மே ஆ) பாப்லோ நெருடா இ) வால்ட் விட்மன் ஈ) இந்திரன்
8. கலைகளின் உச்சம் …….. என்பர்.
   அ) கதை ஆ) பாட்டு இ) நடனம் ஈ) கவிதை
9. "கவிதையினை இயன்றவரை பேசுவதுபோல் எழுதுவதுதான் உத்தமம்" என்றும் அதுவே, "மானுடத்துக்கு எழுத்தாளர்கள் செய்யும் கடமை" என்றும் கூறியவர்
   அ) இந்திரன் ஆ) வால்ட் விட்மன்
   இ) மகாகவி பாரதியார் ஈ) கூ.வில்வரத்தினம்
10. "பறவைகள் ஒருவேளை தூங்கப் போயிருக்கலாம்" - இக்கவிதை நூலின் ஆசிரியர்
   அ) மனோரமா பிஸ்வாஸ் ஆ) கூ.வில்வரத்தினம்
   இ) பாரதியார் ஈ) வால்ட் விட்மன்